உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

[தொகுதி-௫௨.] மன்மத-௵—கார்த்திகை-மீ [பகுதி-௧.
Vol. 52. November-December—1955. No. 1.

உள்ளுறை

பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்: 1
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

புள்ளினத்தின் புனிதத்தொண்டு: 14
சாமுவேல் ஆபிரகாம்

மோரியர் படையெடுப்பு: 21
தமிழரும் நுண்கலைகளும்: 26
டாக்டர் மா. இராசமாணிக்கனார்

போச்சாவாக் கருவி:
வித்துவான் [illegible]

வருஷம் ஒன் [illegible]

ADURA

"செந்தமிழ்" ஆசிரியர் குழு:

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
   தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு. பேராசிரியர், செந்நாவலர், அ. கார்மேகக்கோனார், மதுரை

3. டாக்டர். மா. இராசமாணிக்கனார் M. A. M. O. L. L. T Ph. D.
   தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
   தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

5. திரு. நா. அப்பனையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
   வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
   செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
   அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்.
   தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-௫௨.] மன்மத-ஹூ—கார்த்திகைமீ [பகுதி-௧.
Vol. 52. November-December—1955. No. 1.

பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்

சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை

குட்டநாட்டு வஞ்சிநகரைத் தலைநகராகக்கொண்டு சேரநாட்டை யாண்ட வேந்தர்களுள் மிகவும் பழையோனாக இவ் வுதியஞ்சேரலாதன் காணப்படுகின்றான், இவனைப் புறநானூறு பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் என்று குறிக்கின்றது. சேரலாதன் என்பதைப் பொதுவாகக் கொண்டு, பெருஞ்சேரலாதன், நெடுஞ்சேரலாதன், என்று பெயர் தாங்கியோர் பலர் உள்ளனர். அது நோக்க, சேரலாதன் என்பது சேரவேந்தர் குடிப்பெயரென்று தெளியக் காணப்படும். சேரலாதனென்பது சேரவேந்தனான ஆதன் என்று பொருள்படுகிறது. படவே, சேரலாதன் என்ற பெயருடையோர், சேரமான் ஆதன் என்பான் வழிவந்தவர் என்பது இனிது விளங்கும். இச் சேரமானும் உதியன் சேரலாதன் எனப்படுவதால், இவன் ஆதன் வழிவந்தவன் என்பது பெறப்படும். அந்த ஆதனைப்பற்றி இதுகாறும் ஒன்றும் தெரிந்திலது. ஆதன் அவினி யென்றொரு சேரமான் ஐங்குறுநூற்றிற் காணப்படுகின்றான். அந்த அவினியும் ஆதன்வழி வந்தோனாகத் தெரியினும், அவ்வாதன் சேரமானாகிய ஆதன் அல்லன் என்பது அவன் சேரல்ஆதன் எனப்படாமையால் விளங்குகிறது,

*

இச் சேரலாதன் பெருஞ்சேற்றுதியன் எனப் புறநானூற் தொகுத்த சான்றோரால் குறிக்கப்படுவன். மாமூலனர் முதலிய கச் சான்றோர் உதியஞ்சேரல் என்றும் உதியன் என்றும் வழங்கு றனர். இவன் காலத்தே குட்டநாட்டுக்குத் தெற்கில் வேளிர் வாழ்ந்தனர். அவர் வாழ்ந்தநாடு வேணுடு எனப்படும். மேனுட்டு னர் குறிப்புக்கள் கொல்லத்துக்குத் தென்பகுதியில் வேள் ஆய் வ யினர் ஆட்சிசெய்தனரென்றே குறிக்கின்றன. பிற்காலத்து வே விக்குடிச் செப்பேடும் [1] இந்நாட்டு வேளிரை ஆய்வேள் என்று குறி கின்றது. இப்பகுதியிலிருந்து இன்றும் அரசுபுரிந்துவரும் திரு தாங்கூர் வேந்தர்கள் தம்மை வேணுட்டடிகள் என்பதும் இக் கரு தை வற்புறுத்தும். இக்கருத்தை யறியாமையால் சிலர் வேணுடு என் பது, [2] வானவனுடு என்பதன் திரிபு எனக் கூறுகின்றனர்.

இவ்வுதியன் காலத்தில் வேணுட்டில் வெளியன் என்னும் வேளிர் தலைவன் வாழ்ந்து வந்தான். அவனுடைய மகள் வேண்மாள் என வளை உதியன் மணந்துகொண்டான். இத்திருமணத்தின்பயனுக உதி யன் சேரலுக்கு மக்கள் இருவர் தோன்றினர். முன்னவனுக்கு நெடுஞ்சேரலாதன் என்றும் பின்னவனுக்குக் குட்டுவன் என்றும் பெயரிட்டான். இருவரும் அரசர்க்கு வேண்டப்படும் கலைபலவு இளமையிலேயே நன்குபயின்று வந்தனர்.

முடிவேந்தர்க்கு மகட்கொடை வழங்கும் முறைமை தமிழகத்தே வேளிர்கள்பால் இருந்தமையின், அவ்வேளிர்களைத் தங்கள் நாட்டை அடுத்துள்ள பகுதிகளில் இருந்துவருமாறு செய்வது பண்டை வேந் தர் மரபு. பாண்டிநாட்டை யடுத்துள்ள பறம்பு நாட்டிலும், சோழ நாட்டையடுத்துள்ள கொல்லிநாட்டிலும் தொண்டைநாட்டை யடுத் துள்ள மலையமான் நாட்டினும் பிறவிடங்களிலும் வேளிர்கள் இருந்து வந்தமை சங்கஇலக்கியம் பயில்வோர் நன்கறிவர். இவ்வாறே சோ

[1] Ep. Indi. Vol. xvii; No. 16. p. 303.
[2] K. P. P. Menon's History of Kerala. Vol. 11.

னர்கள் தெற்கில் வேணாடு கொண்டதுபோல வடக்கில் வானவாசி டையே ஒரு வேணாட்டைக் கொண்டனர். அவ் வேணாடு க்காலத்தே வேளகமாயிருந்து இப்போது பெல்காம் (Belga-) என வழங்குகிறது. மேலும், மகட்கொடை வழங்கும் வேளிர் கள் நாட்டை யடுத்திருப்பது, தமிழ் வேந்தர்க்கு ஒரு சிறந்த அரணாகவும் விளங்கிற்று. "பெண்ணைக் கொடுத்தோமோ கண்ணைக் கொடுத்தோமோ" என்பது தமிழரிடை நிலவும் பழமொழி. மகட் கொடை புரிந்த வேளிர் தம் மகளது வாழ்வு குறித்து அவர்களை மணந்துகொண்ட முடிவேந்தர்க்குத் தக்க பெருந்துணைவராய் இருந் தனர்.

மகட்கோள் முறையால் வேணாட்டவரோடும், வானவாசி நாட்ட வரோடு வரம்பறுத்துக்கொண்டவகையால் அவர்கள்பால் தோன்றக் கூடிய முரண்கெடுத்து இனிய அரசுமுறைநடத்திவந்த சேரவேந்தர்க் குத் தாம்வாழ்ந்த நாட்டிடம் "சிறிது" என்ற உணர்வுதோன்றி அவர் கள் உள்ளத்தை அலைத்துக்கொண்டிருந்தது. உதியஞ்சேரல் காலத் தில் தென்பாண்டி நாட்டையாண்ட வேந்தர் செவ்விய அரசுபுரியும் வலியிலராகியிருந்தனர். வேணாட்டுவேளிர்கள் தனக்குரியராய் இருந்த மையின், அவர் நாட்டுக்குத் தெற்கிலுள்ள தென்பாண்டி நாட்டைத் தன்னாட்டோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற வேட்கை சேர லாதற்கு உண்டாயிற்று. அதனை நிறைவேற்றிக்கோடற்குரிய செவ்வி தோன்றியதும் உதியஞ்சேரல் தென்குமரியைச் சூழ்ந்திருந்த தென்பாண்டிநாட்டை வென்று தெனகடற்கோடியைத் தன்னாட்டுக்கு எல்லையாகக் கொண்டான். அந் நாட்டுக் கீழ்கடற்கரையும் சேரர்க்கு உரியதாயிற்று. இதனால் சான்றோர் இவனை, "நாடுகண் அகற்றிய உதியஞ்சேரல்" [1] என்று பாராட்டினர். இச் செய்தியை நினைவிற் கொண்டே பின்பொருகால் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடப் புகுந்த கபிலர், "இடஞ் சிறிதென்னும் ஊக்கம் துரப்ப, ஒடுங்கா வுள் ளத் தோம்பா வீகைக் கடந்தடுதானைச் சேரலாதன்" [2] என்று பாடி னர். இதனால் உதியனது புகழ் தமிழகம் முழுதும் பரவிற்று. பல

[1] அகம், 65. [2] புறம். 8.

இடங்களில் ஊர்கள் நிறுவப் பெற்றன. நாட்டில் செல்வப்பெருக்கும் நல் வாழ்வும் சிறந்தன. இச்சிறப்புப்பற்றி நாட்டில் உதியன் பேரூர், உதியன் சேரி என்ற பெயருடைய ஊர்கள் உண்டாயின. அவற்றுட் சில இன்னும் நின்று உதியன் சேரலின் உயர்புகழை நினைப்பித்துக் கொண்டிருக்கின்றன.

பண்டைத் தமிழ்வேந்தர் முத்தமிழையும் வளர்ப்பது தமது கடனாகக் கொண்டவர். அம்மூன்றும் இயல், இசை, கூத்து என்பன. கூத்து, கூத்தர்பாலும், இசை, பாணர் பொருநர் முதலியோர் பாலும் இயல் புலவர்பாலும் வளர்ந்தன. இவற்றால் நாட்டுமக்களுடைய உள்ளம், உரை, செயல் ஆகிய மூன்றும் பண்பட்டன. அதனால் கூத்தர்க்கு வேண்டுவனநல்கிக் கூத்தையும், பாணர்க்குக் கொடைவழங்கி இசையும் புலவர்க்குப் பரிசில் கொடுத்து இயலும் வளர்த்தனர் இதனை ஏனைச் சோழ பாண்டியர் செய்ததுபோலவே சேரமானாகிய உதியஞ்சேரலும் செய்தான். ஆயினும் போர்த்துறையில் மிக்க ஈடுபாடுடையனாதலால், இசைவாணரைவரவேற்றுப் போர்மறவரிடையே இனிய குழலிசையை இசைக்குமாறு புதியதோர் ஏற்பாட்டினைச் செய்தான். மறவரது மறப்பண்பையும், இசை, தனது நலத்தால் மாற்றிவிடும் என்பது உணர்ந்து அதனால் மறம்வாடாத நிலையுண்டாதல் வேண்டி உதியன் இச்செயலைச் செய்தான். இதனை நுணுகிக் கண்ட இளங்கீரனார் என்னும் சான்றோர் "உதியன் மண்டிய ஒலிதலை ஞாட்பின், இம்மென் பெருங்களத்து இயவ ரூதும், ஆம்பலங்குழல்"[1] என எடுத்தோதுகின்றார்.

உதியனது சேரநாடு கிழக்கில் கொங்குநாட்டிலும் பரவியிருந்தது. அப்பகுதியில் குழூமூர் என்பது ஒரூர்.[2] இப்போது உடுமலைப் பேட்டை தாலூகாவில் குழுமம் என்ற பெயருடன் இருக்கிறது.

---

[1] நற். 113. [2] வேள்விக்குடிச் செப்பேடுகளில் காணப்படும் குழும்பூர், (Epi. Indi. Vol. xvii, பக். 191) பாண்டிநாட்டுப் பாகனூர்க் கூற்றத்தைச் சேர்ந்ததாகலின் அதனை இக் குழுமூரெனக் கோடல் வரலாற்று நெறிக்குப் பொருந்தவில்லை.

ஒருகால் அப்பகுதியில் கடும்போர் உடற்றி வென்றி யெய்திய உதியஞ் சேரல் தன்னெடு போர்க்களம் புகுந்து பகைவரொடு போருடற்றித் துறக்கம்பெற்ற சான்றோர் பொருட்டுப் பெருஞ்சோற்று விழாவொன்றைச் செய்தான்.[1] இதனைப் "பிண்டம் மேய பெருஞ் சோற்று நிலை"[2] என்று தொல்காப்பியர் கூறுவதனால், இது தமிழ்மக்களிடையே தொன்றுதொட்டு வரும் மரபு என்பது தெளியப்படும். பாரதப்போர் நிகழ்ந்தகாலத்தே சேரநாட்டு வேந்தரும் அதன்கட் கலந்துகொண்டனர். அதற்கு வியாசரெழுதிய பாரதமே சான்று பகருகிறது. அப் போர்முடிவில் பாண்டவர்களையும் எஞ்சி நின்ற கௌரவர்களையும் ஒருங்குகூட்டி அரும்போர் செய்து துறக்கமெய்தியோர்க்காகப் பெருஞ்சோற்றுவிழாசெய்தல்வேண்டுமென அப்போர்க்குச் சென்றிருந்த சேரவேந்தன் வற்புறுத்திப் "பெருஞ் சோற்று நிலை" யொன்றை நடத்தினான். அவன் வழிவந்தோனாதலால், உதியஞ் சேரல் குழுமூர்க்கண் பெருஞ்சோற்றுவிழா நிகழ்த்தியதை வியந்து பாடவந்த முடிநாகனாரென்ற சான்றோர், இவனுடைய முன்னோன் செயலை இவன்மேலேற்றி,

"அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூர் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"[3]

என்று பாடினர். இந்த முடிநாகனர் சோநாட்டு ஊர்களுள் ஒன்றான மூரஞ்சியூர் என்னும் ஊரினர்; இப்போது அது முரிஞியூர் எனவழங்குகிறது. அதுவே, கொச்சிவேந்தர் குடும்பக்கிளைகளான மூத்ததாய்வழி, இளையதாய் வழி, முரிஞியூர்த்தாய் வழி, சாலியூர்த்தாய் வழி, பள்ளிவிருத்திதாய் வழி[4] எனப்படும் கிளைகளுள் முரிஞியூர்த் தாய்வழிக்குரிய ஊராக இருப்பது கருதத்தக்கது. இவ்வூரினரான முடிநாகனார்க்கு வேந்தர் குடிவரவு நன்கு தெரிந்திருத்தற்கு வாய்ப்புண்மையால் அவர் இதனை நினைந்து நம் உதியனை இவ்வாறு சிறப்பித்துப் பாடினர்.

---

[1] அகம். 168; 235. [2] தொல். பா. 63. [3] புறம். 2. [4] K. P. P. Menon's History of Kerala Vol. I. P. 480.

இப்பிண்டம்மேய பெருஞ்சோற்றுநிலையென்னும் புறத்துறையை மேற்கொண்டு புலவர் பாடும் புகழுண்டாகச் செய்தோர் இவ்வுதியன் சேரர்க்கு முன்னும் பின்னும் வந்தோருள் பிறர் எவரும் இல்லாமையால், பிற்காலச் சான்றோர் நம் உதியஞ்சேரலை, பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் என்று சிறப்பித்துக் கூறுவாராயினர்.

இனி, புறநானூற்றுப் பழையவுரைகாரர் இப்பாட்டின் உரையில் "பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோன்" இப் பெருஞ்சோற்றுதியற்கு முன்னோன் என்றும், முன்னோன் செய்கை இவ் வுதியஞ்சேரல்மேல் ஏற்றிக் கூறப்படுகிறதென்றும் கூறுமையால், இதனைக் கண்டோர், இச் சேரலாதன் பாரதகாலத்தவனென்றும், பாரதவீரர்கட்குப் பெருஞ்சோறு அளித்தவன் இவனே யென்றும், இவனது இச்செயலைப் பாராட்டிப் பாடும் இம்முடிநாகனும் பாரதகாலத்தவரென்றும் கருதி யுரைப்பாராயினர். இச் சான்றோரது பெயர் தலைச்சங்கப் புலவர் நிரலுட் காணப்படுதலால், தலைச்சங்க காலம் பாரதகாலத்தோடு ஒப்பநோக்கும் தொன்மையுடையதென்பது பற்றி, பெருஞ்சோற்றுதியன் பாரதகாலத்தவனென்பது துணிதற்கு ஏற்றவாய்ப்புப் பெறுவதாயிற்று. இமயவரம்பன் தந்தையாகிய நாம் மேற்கொண்டுரைக்கும் உதியஞ்சேரல் பாரத காலத்தவனாதற்கு இயைபின்மையால், பெருஞ்சோற்றுதியன் வேறு, இமயவரம்பன் தந்தையான உதியன்சேரல் வேறு[1] என்றும், "துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை, முதியர்ப் பேணிய உதியஞ் சேரல், பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை"[2] என மாமூலனார் கூறுவது பாரதப் போரில் நிகழ்ந்தது என்றும் திரு. மு. இராகவையங்கார் கூறுவர்.

பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் பாரதகாலத்தவன் என்னும் கூற்றைமேற்கொண்டு ஆராயலுற்ற அறிஞர் வேறு கூறுவர்: கோதுமை யுண்ணும் கூட்டத்தவரான பாண்டவ கௌரவர்கட்கு நெற்சோறுண்டு தென்னாட்டுப் பகுதிகள் ஒன்றில் வாழும் வேந்தனொருவன் சோறு

---

[1] சேரவேந்தர் செய்யுட்கோவை. முன். ix. [2] அகம். 235.

கொடுத்தான் என்பது சிறிதும் இவ்வாவுரை; கௌரவர் இறந்தது குறித்துச்செய்தவிழாவில் பேரெண்ணினரான மக்கட்கு இவ்வுதியன் பெருஞ்சோறளித்தான் என்று கொள்வதே பொருத்தமானது. இவ் விழா, பாரதவீரர்கட்குச் சிரார்த்தமாகவோ பாரதக் கதையை நடித்த நாடகத்தின் இறுதிவிழாவாகவோ இருத்தல் வேண்டும்; சோநாடு நெடுங்காலமாகக் கதாகளி யென்னுங் கூத்துக்குப் பெயர் போனது; பாட்டும் உரையுமின்றி அவிநயத்தால் உள்ளக் கருத்தை யுணர்த்துவது இதன் இயல்பு; இத்தகைய கதாகளி யொன்றின் இறுதி விழாவாக இப் பெருஞ்சோறளிக்கப்பட்டதாம்; இதுபோலும் கூத்துக்கள் தமிழ்நாட்டில் நடைபெறுவது வழக்கம்; செயற்கரும் செயல் செய்த வீரர் வரலாறுகளை நடித்துக் காட்டும் இக்கூத்த வகை தமிழ்நாட்டில் தொன்மை வழக்காதலின் இவற்றைப் பட்டவர்குறியென்றும் கூறுவதுண்டு; இதனைக் கம்பசேவை யென்றும் கம்பக் கூத்தென்றும் இக் கூத்தாடுபவரைக் கம்பஞ் சேய்மாக்கள் என்றும் கூறுவர்; இக்கம்ப சேவையிற் கலந்தாடும் உழவர்கட்கு, உடையோர் பெருஞ்சோறளித்துப் பெருமைசெய்வர்; "உதியன்மண்டிய...குழல்" எனவரும் இளங்கீரனர் பாட்டும்[1] "நாடுகண் அகற்றிய.........போல" எனவரும் மாமூலனர் பாட்டும்[2] இச் சேரலாதனுடைய போர் வன்மையையும் கொடைச் சிறப்பையும் உணர்த்தி நிற்கின்றன; இத்தகைய செம்மல் பாரதப்போரில் குருக்ஷேத்திரத்தில்பாரதவீரர்கட்குச் சோறுபோடும் பணியில் தலைமை தாங்கினனென்பது உண்மைக்குப் பொருத்தமாக இல்லை என்பது அவர்கள் உரை.[3] வேறுசிலர், இக் கருத்தேயுடையராயினும், உதியஞ் சேரலாதன் தன்னுடைய முன்னேருள் சிலர் பாரதப்போரில் இறந்தாராக அவர்கட்குச் செய்த ஆண்டு விழாவில் இப் பெருஞ்சோற்றை நல்கியிருக்க வேண்டுமென உரைக்கின்றனர்[4].

---

[1] நற். 113. [2] அகம். 65. [3] P. T. S. Ayengar's History of the Tamils p. 492-4. [4] Chera kings of Sangam Period by K. G. Sesha Iyer. p. 7.

பெருஞ்சோற்றுதியன் வரலாற்றை முடிக்குமுன் இவ்வுரைகளைப்பற்றிச் சில கூறுவது கடனாகின்றது. "பெருஞ்சோறு" என்பதற்குச் சிலர் நெற்சோறு என்று பொருள் கருதிக்கொண்டு, பாண்டவ கௌரவர்கள் கோதுமையுண்பவரென்றும், சேரமான் நெற்சோறு கொடுத்தானென்றும் உரைக்கின்றனர். பெருஞ்சோறென்பது நெற்சோறாகத்தான் இருக்கவேண்டுமென்பதன்று; வரகுசோறு, கம்பஞ்சோறு, தினைச்சோறு, கோதுமைச்சோறு என வழங்குவதுண்மையின் பெருஞ்சோறென்றது பேருணவு என்னும் பொருளது.

அவர்கள் கூறுமாறு பாண்டவகௌரவர் செய்துகொண்ட போரைத் "தென்னாட்டில் ஒரு மூலையில்" வாழும் சேரவேந்தன் பாராட்டி அப்போரில் இறந்தோர் பொருட்டுப் பெருஞ்சோற்று விழாவைச் செய்தற்கு ஒரு தொடர்பும் இல்லை; அந்நாளில் வடவாரியர்க்கும் தென்தமிழர்க்கும் சிறந்த நட்புரிமை இருந்ததாக எண்ணுதற்கும் இடமில்லை; வடவாரியர் பிணங்கியதும் அவரைத் தென்னாட்டுத்தமிழர் "அலறத்தாக்கி"[1] வென்றதுமே சங்கவிலக்கியங்களிற் பேசப்படுகின்றன. "பேரிசை மரபின் ஆரியர் வணக்கி"[2] "ஆரிய வண்ணலை வீட்டி"[3] "ஆரியவரசர் கடும்பகைமாக்களைக் கொன்று"[4] என்றெல்லாம் சங்கநூல்கள் கூறுவதைக் காணுகின்றோம். ஆகவே அவர் பொருட்டுச் சேரலாதன் விழாச்செய்திருக்கலாமென அவர்கள் கூறுவது பொருந்தாதென்பது தெளிவாகிறது.

இனி, பிற்காலத்தே தென்னாட்டு ஊர்களில் பாரதம் படிப்பதும்[5] அது குறித்துத் தென்னாட்டுச் செல்வர்கள் பாரதவிருத்தி யென[6] நிவந்தங்கள் விடுவதும் உண்டேயன்றிச் சங்ககாலத்தே இந்நிகழ்ச்சிகள் நடந்தன என்று கொள்வதற்குச் சங்கநூல்களில் ஆதாரவு சிறிதும் இல்லை.

---

[1] அகம். 396 [2] பதிற். ii. பதி. [3] Ibid. v. பதி. [4] சிலப். கால்கோள். 211.
[5] A. R. No. 540. of 1922 [6] A. R. No. 580 of 1922

இனி, சாக்கைக்கூத்து வகையில் அபிநயக் கூத்தின் விளைவாக நிலவும் கதாகளி யென்னும் கூத்தின் இறுதிவிழாவாக இப் பெருஞ்சோறளிக்கப்பட்டதென்ற கருத்து வரலாற்று நெறியை நோக்காது எழுந்ததாகும். சங்ககாலச் சேரவரசு மறைந்தபின், வடநாட்டார் அதனுட்புகுந்து அதனைக் கேரளநாடாகமாற்றியபோது ஆங்காங்குத் தோன்றிய சிற்றரசர்களுள் கொட்டாரக்கரைச் சிற்றரசரொருவர் இக் கதாகளிக் கூத்தை முதற்கண் ஏற்படுத்தினர்[3]; இச்சிற்றரசர் பெருஞ்சோற்றுதியனுக்குப் பன்னூறாண்டுபிற்பட்டவர்; பிற்பட்டகாலத்துத் தோன்றிய ஒருவகைக் கூத்தைப் பெருஞ்சோற்றுதியன் காலத்தில் நிகழ்ந்ததாகக் கூறுவது அறமாக இல்லை.

பிற்காலத்தில் தோன்றிய பாரதக்கூத்தின் அடியாகத் தோன்றியவை கம்பசேவை, கம்பக்கூத்து முதலியனவாதலால் இவற்றைக் காட்டிப் பெருஞ்சோற்றுதியன் பெருஞ்சோறளித்த நிகழ்ச்சியை மறுப்பது பொருத்தமாக இல்லை.

இத்துணையும் கூறியதனால், பெருஞ்சோற்றுதியன் கொங்கு நாட்டிற் பெற்ற வெற்றிவிழாவில் மேற்கொண்டு மகிழ்ந்த பெருஞ்சோற்றுநிலையென்னும் புறத்துறைச்செயல், அவனுக்கே சிறப்பாய் அமைந்தமையின் அவன் பெருஞ்சோற்றுதியன் எனச் சிறப்பிக்கப் பெற்றான் என்பதும், அதனைப் பாராட்டவந்த முடிநாகனார், ஒப்புமை பற்றி முன்னோன் ஒருவன் செயலை இவன் மேலேற்றிக் கூறினரென்பதும் தெளியப்படும்.

பெருஞ்சோற்றுதியன் வேறு, இமயவரம்பன் தந்தையான உதியஞ்சேரல் வேறு என்றற்குக் காரணம், இமயவரம்பன் தந்தையை, "மன்னியபெரும்புகழ் மறுவில்வாய்மொழி, இன்னிசை முரசின் உதியஞ்சேரல்" என்று பதிற்றுப்பத்தின் இரண்டாம் பதிகம் கூறுகிறதேயன்றி, பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் என்று கூறாமையாகும். மாமூலனார் பாட்டு, "துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை முதியர்ப் பேணிய உதியஞ் சேரல் பெருஞ்சோறு கொடுத்த

3 K. P. P. Menon's Hitory of Kerala Vol. iv. p. 525·

ஞான்றை"[1] என்று போதுப்படக் கூறுவதனால், பாரதப்போரில் பெருஞ்சோறளித்த குறிப்பு மாமூலனார்க்கில்லையென்பது விளங்குகிறது.

"இடம் சிறிதென்னும் ஊக்கம் துரப்பத்" தென்பாண்டிக் குமரிப் பகுதியையும் கொங்குநாட்டுப் பகுதியையும் வென்று "நாடுகண் அகற்றிய" செயலால் பெரும்புகழ்பெற்ற குறிப்பை "மன்னிய பெரும்புகழ்" என்று பதிகம் கூறிற்று. முடிநாகனாரும், "நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின்......குடகடற்குளிக்கும் யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந" என்பதனால் நாடுகண் அகற்றிய திறமே கூறினாராயிற்று. இவ்வாறே, போர்க்களத்தே இயவரைக் கொண்டு ஆம்பலங்குழலை இயம்புமாறு செய்தான் உதியஞ்சேரல் என இளங்கீரனார் கூறிய குறிப்பே "இன்னிசை முரசின் உதியஞ்சேரல்" என்ற பதிகக்கூற்றிலும் காணப்படுகிறது. இதனால் இமயவரம்பன் தந்தையான உதியஞ்சேரலே பெருஞ்சோற்றுதியஞ்சேரலாதன் என்று காணலாம்.

கொங்கு நாட்டிலும் தென்பாண்டி நாட்டிலும் உதியஞ்சேரல் செய்த போர்ச்செயல்களையும், அக்காலத்தே தனக்குத் தீங்குசெய்ய முயன்ற பகைவர் பின்பு புகலடைந்தபோது அவர்கள் பகைத்துச் செய்தவற்றை நினையாது பொறைமேற்கொண் டொழுகியதும், தன்னை வெல்வது கருதிப் பகைவர்செய்த சூழ்ச்சிகளை முன்னறிந்து அவை அவர்கட்குப் பயன்படாதபடி தான் முன்னே சூழ்ந்து வெற்றிபெற்றதும், எதிர்நின்று பொருபவர் எத்துணை முயன்றும் கடைபோக நிற்கமாட்டாது கெடுமாறு மோதும் உதியனது வலியும், பொறுக்கலாகாத குற்றம் செய்தாரைத் தமது குற்ற முணர்ந்து திருந்தியமையு மளவாகத் தெறும் தெறலும் தன்பால் அன்புடையார்க்குத் தண்ணியனாய்ச் செய்யும் அருளும் முடிநாகனார் நேரே கண்டார். நிலவுலகத்து வாழும் மக்கட்கு இறைவனாய்த் திகழும் வேந்தன், உலகத்தின் கூறுகளான நிலம் ஐந்தன் இயல்புகளை

[1] அகம் 233.

உடையனாதல் வேண்டும்; மக்கள்உடல் நிலைபெறுதற்கு நில முதலிய ஐந்தும் ஆதாரமாவதுபோல உயிர்வாழ்வுக்கு அரசனது ஐவகை இயல்பும் ஆதாரமாம் என்பது அரசியலின் அடிப்படை; இவ் வைந் தும் உதியன்பால் காணப்பட்டமையின், "வேந்தே நீ பொறையும் சூழ்ச்சியும் வலியுமாகிய எல்லாம் உடையனா யிருக்கின்றாய்; நாட் டின் பரப்புச் சிறிதுஎன்று கருதி மேலைக்கடற்கும் கீழ்க்கடற்கும் இடைப்பட்ட நிலப்பகுதியை வென்றுகொண்டாய்; அதனால் நாளும் ஞாயிறு நின்கடலிலே தோன்றி நின்கடலிலே மறைகிறது; நாடு பரப் புவதிலே கருத்தைச் செலுத்தும் வேந்தன் பரப்பு மிகுதற் கேற்ப நாட்டின் வருவாயும் நாடோறும் பெருகச்செய்தல் அரசியற்கு இன்றியமையாதென்ற கருத்தையும் நீ மறந்தவனல்லை என்பது நன்கு தெரிகிறது" என்று பாராட்டிக் கூறினர்.

தெற்கிலும் கிழக்கிலும் நாடுகண் அகற்றியும் வருவாய்பெருக்கி யும் உதியனது அரசியல் இயங்கியது காணும் வானவாசிகள், முன் னைச் சேரர் வரையறுத்த வரம்பு கடவாது அஞ்சியே ஒழுகினர்; வரம் பறுத்த வேந்தனது பார்வை வரம்பின்மேல் இருப்பது வானவாசி கட்குத் தெரிந்தவண்ண மிருக்குமாறு உதியன் காவல் செய்தொழு கியது கண்டு முடிநாகனர் பெருவியப்புக் கொண்டார்; "வானவரம் பனை நீயோ பெரும" என்று பாராட்டினர்.

வானவரம்பரான பண்டையோர்போல இன்றும் நீ வான வரம்ப னாய் விளங்குகின்றாய்; அதனால் பண்டு பாரதப்போரில் பெருஞ் சோற்று நிலை யென்னும் புறத்துறைமுற்றிய நின் முன்னோரைப்போல இன்றும் அப்புறத்துறைச் செயலைச் செய்கின்றாய். இவ்வாறு சேர வரசு மேற்கொண்டு செய்தற்குரிய கடன்களைச் செவ்வனம் ஆற்றி விளங்குதலால், இனிக்கும் பால் இனிமை திரிந்து புளிக்குமாயினும் ஒளிதிகழும் பகற்பொழுது ஒளி திரிந்து இருளுமாயினும், நெறிநிற் கும் நான்மறைகள் நெறிதிரியுமாயினும் நின்பால் அன்புடைய நின் சுற்றத்தாரோடு அன்புதிரியாது புகழ்மிகுந்து அருங்கடன் இறுக் கும் அந்தணர் உறையும் வடவிமயமும் தென்பொதியிலும போல நிலைபெறுவாயாக என்று வாழ்த்தினர்.

இதனால் மகிழ்ச்சி மிகுந்த உதியஞ்சேரல் முடிநாகனார்க்குப் பெருஞ் சிறப்புச் செய்தான். அவரும் ஏனைப் பரிசிலரும் பெருவளம் பெற்று இன்புற்றனர். இவ்வண்ணம் அறந்திரியாத சுற்றத்தாரோடு மக்கள் நலமும் மனைநலமும் சிறந்தோங்கப் பெருஞ்சோற்றுதியனது பேராசு நிலவிற்று.

இவ்வாறு இருந்துவருகையில் இளங்கீரனார் என்னும் சான்றோர் ஒருகால் பெருஞ்சோற்றுதியனது போர்க்களம் சென்று கண்டார். அங்கே போர்முரசின் முழக்கத்தூடே ஆம்பலங்குழலை இயவர் இசைத்தனர். கன்னெஞ்சையும் நீராயுருக்கும் அக் குழலிசையால் போர் மறவாது நெஞ்சம் சிறிதும் பேதுறாது மறத்தீக் கொழுந்துவிட்டெரிவது கண்டார். இனிய இசைக்குருகாத அளவில் மறவர் நெஞ்சினை மாற்றியிருத்தலின் குறிப்பினைத் தக்கோரைக்கேட்டு உணர்ந்தார்.

முன்பு ஒருகால் சேரவேந்தர் வானவாசி நாட்டவரோடு போர் செய்யவேண்டியவராயினர். அவர்கள் சேரர்க்குரிய கொண்கானம் கடந்து குடநாட்டின் எல்லையிற்புகுந்து குறும்புசெய்து அலைத்தனர். அவர்களை வெருட்டுவது குறித்துச் சேரர்படைசென்று அவர்களைத் துறத்திற்று. கொண்கானநாட்டில் ஒருகால் பாடியமைத்திருக்கையில் பகைவர் இன்னிசை இயவராய்வந்து குழலூதி மகிழ்வித்தனர். அக் குழலிசையில் சேரர்படையின் தலைவர் ஈடுபட்டு அருள்மேவிய உள்ளத்தாராயினர். அதன்பயனாகச் சேரர்படை வானவாசிகட்குத் தோற்றோடி வருவதாயிற்று. அதனையறிந்திருந்தமையின், உதியஞ் சேரல் போர்க்களத்தின்கண் இயவரைக்கொண்டு இம்மென இசைக்கும் ஆம்பலங்குழலை யிசைக்கச்செய்தான்.

இதனைக் கேட்டறிந்த இளங்கீரனார், ஒருகால் தலைமகன் ஒருவன் தன் இனிய காதலியைப் பிரிந்து செல்வது பொருளாகப் பாடவேண்டியவரானார். அத்தலைவன் ஒரு சுரத்திடையே சென்றுகொண்டிருக்கையில் தன் காதலியை நினைத்துக்கொண்டான். அவன் மனக்கண்ணில் காதலியின் திருமுகம் தோன்றியது. தான் தன் பிரிவை உணர்த்தக்கேட்டதும், அவள் ஆற்றாமல் கண்கலுழ்ந்ததும் அதனைத் தனக்குத்தெரியாதவாறு தன் கூந்தலால் மறைத்துக்

கொண்டதும், அவளையறியாமலே மெல்லிய அழுகைக்குரல் தோற்றுவித்ததும் நினைவுக்கு வந்தன. அவற்றை அச்சான்றோர் அழகிய பாட்டாக எழுதினர். எழுதுங்கால், அவளுடைய ஏங்கு குரலை எடுத்துக்காட்ட நினைந்த அவருக்கு உதியன் போர்நிலத்தே இயவர் எழுப்பும் ஆம்பற் குழலிசை உயர்ந்த உவமையாகத் தோன்றிற்று. "நெய்தல் உண்கண் பைதல்கூரப், பின்னிருங் கூந்தலின் மறையினள் பெரிதழிந்து, உதியன் மண்டிய ஒலிதலை ஞாட்பின் இம்மென் பெருங் களத்து இயவரூதும், ஆம்பலங் குழலின் ஏங்கிக், கலங்கஞர் உறுவோள்" [1] என்று பாடினர். காதலியின் ஏக்கம் பொருள்மேற்சென்ற அக்காளையது உள்ளத்தை மாற்றமாட்டாதொழிந்ததுபோல, இயவரது ஆம்பற்குழலிசை உதியனுடைய மறவருள்ளத்தை மாற்றமாட்டாதொழிந்தது என்பது குறிப்பு.

செங்குட்டுவன் வடநாடு சென்றபோது நீலகிரியில் தங்கியிருக்கையில் கொங்கணக்கூத்தரும் பிறரும் போந்து பாடிப் பரிசில் பெற்றதும் [2] ஆடுகோட்பாட்டுச்சேரலாதன் வடநாட்டிற் போருடற்றச் சென்றபோது கொண்கானநாட்டு விறலியர்போந்து இசையும் கூத்தும் நல்கக் காக்கைபாடினியார்போந்து அவன் உள்ளத்தை வினைமேற் செலுத்தியதும் [3] கி.பி. பதினாறும் நூற்றாண்டில் மேலைக்கடற் கரைக்குப் போந்த போர்ச்சுகீசியர் கோவா நாட்டினின்றும் கன்னட நாட்டினின்றும் வரும் அழகிய ஆடல்மகளிர்கூட்டம் நயந்து அதனால் பகைவர் கைப்பட்டு வருந்தி அஞ்சுதீவுக்கு ஓடிப்போந்து தங்கியதும் [4] இக் கருத்துக்கு மிக்க ஆதாரவு தருகின்றன.

---

[1] நற். 113. [2] சிலப். [3] பதிற் : 51. [4] Bom. Gazet. Kanara part ii. p 253.

புள்ளினத்தின் புனிதத்தொண்டு

சாமுவேல் ஆபிரகாம் B. A; B. SC. (HONS.) L. T. விலங்கியல் துறைப் பேராசிரியர், அமரிக்கன் கல்லூரி, மதுரை.

(51-ம் பகுதி 351-ம் பக்கத்தொடர்ச்சி.)

விதைகளும் கனிகளும் பரவுவதற்குப் பறவைகள் பெரிதும் உழைக்கின்றன. காகங்கள் வேப்பங்கனிகளையும் ஆலங்கனிகளையும் உண்டு அவற்றின்விதைகளைத் தங்கள்எச்சத்தோடு இட்டுச்செல்வது கண்கூடு. புட்கள் இத்துறையில் எவ்வாறு பணியாற்றுகின்றனவென்பதற்குச் சார்ல்ஸ் டார்வின் என்பாரின் சான்றே சாலும். அவர் ஒரு தடவை ஒரு கதுவாலியின் (Red Partridge) காலில் ஒட்டியிருந்த மண்ணுருண்டை ஒன்றையெடுத்து, அதை உடைத்து அம்மண்ணைத் தொட்டியிலிட்டுத் தண்ணீர்ஊற்றிநனைத்தார். நாளடைவில் அம்மண்ணிலிருந்து எண்பத்திரண்டு செடிகள் தோன்றின. அவைகள் பன்னிரண்டு ஒற்றைப்பருப்புச் செடிகள்; எழுபது இரட்டைப் பருப்புச் செடிகள்! சிலவகைக் கொக்குகளும் சிறகி உள்ளான் போன்ற பறவைகளும் நாடுவிட்டு வேறுநாடு செல்பவை. இவைகள்விதைகளைப்பற்பல நாடுகளுக்கு எடுத்துச்செல்லும் வாய்ப்புக்களையுடையனவாகும். தென்னிந்தியாவில் சந்தன மரங்களின் விதைகளைப் பரப்புவதில் புல் புல் பறவையும் வார்ப்பீடு (Barbet) என்ற பிறிதொரு பறவையும் ஈடுபடுவதால், அவைகளின் சேவை அதிகம் பாராட்டப்படுகின்றன; அவை சந்தனமரக்காடுகளில் வரவேற்கப்படுகின்றன. பஞ்சாபில் வாதுமைச்செடிகளைப் பறவைகளேபரப்புகின்றன. பின்னும் பறவைகளால் உண்ணப்பட்டு அவற்றின் உணவுக்குழலில் பயணஞ்செய்து வெளிப்போந்த விதைகள், பிறவிதைகளைவிட வீரியமான செடிகளாக வளர்கின்றன. ஆயினும் சிலபறவைகள் லான்டனா என்ற உண்ணிச் செடி விதைகளையும் தாவரங்களின் புல்லுருவி விதைகளையும் பரப்புவது வெறுக்கத்தக்கது. ஏனெனில் உண்ணிச்செடி நூறாண்டுகளுக்கு முன்னர் அலங்காரச்செடியாக மெக்ஸிகோவிலிருந்து இலங்கைக்கு

இறக்குமதி செய்யப்பட்டது. சீக்கிரத்தில் அதன் விதைகள் பறவைகளின் உதவியால் சிதற ஆரம்பித்தன. அவை நம் நாட்டிலே ஆயிரக்கணக்கான வயல்களில் பரவி விவசாயிகளுக்குத்தொல்லைஉண்டு பண்ணுகின்றன. ஆயினும் "குணம்நாடிக் குற்றமும்நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்" என்ற சான்றோருரைப்படி பறவைகள்செய்யும் சீரிய சேவையை மனத்துள் வைத்து அவை செய்யும் சிறு தொல்லைகளை மறத்தல் அறம்.

பறவைகள் மனிதனுக்கு எவ்வாறு உணவாகின்றன என்பது பற்றி நாம் விரித்துரைக்கவேண்டியதில்லை. நரிக்குறவர்கள் காடை, கவுதாரி முதலியவற்றை விற்பது சர்வசாதாரணம். காகத்தின் மாமிசம் காக்காவலிப்பு மருந்து என்ற நம்பிக்கை இருப்பது சிலர் அறிந்திருக்கலாம். சிந்துநாட்டில் ஒவ்வொரு கிராமத்தைச் சுற்றிலும் உணவுக்காகக் கொல்லப்பட்ட நாமக்கோழி (Coot) யின் இறகுக் குவியல்களைப் பார்க்கலாம்; இதைப்பற்றி இங்கேஎழுதுவது கொல்லன் தெருவில் ஊசி விற்பதை ஒக்கும். உணவுக்காகக் கொல்லப்பட்டு மறைந்த பறவைகள் அநேகம். சென்ற நூற்றாண்டிலே அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் கோடிக்கணக்காக இருந்து, பின்பு உணவுக்காகக் கொல்லப்பட்டு மறைந்த இரியல்புறு (Passenger pigeons) ஒன்றே எடுத்துக் காட்டாகும். நம்நாட்டிலும் கானமயில் (Bustard) மேற்கூறிய காரணத்தால் கொல்லப்பட்டுக் குறைந்துகொண்டே வருகிறது.

பறவைகளின் இறகுகளால் யாதாயினும் பயனுண்டா வெனக் கேட்கப் படுகிறது. ஏனெனில் நம்நாட்டில் அதற்கு ஒருவிதப் பயனுமிருப்பதாகத் தெரியவில்லை. அமெரிக்க நாட்டில் இறகுகளின் சிறு பாகமாகிய துய்யிறகு (Barbule) களை எடுத்துப் பருத்திக் கம்பளி என்ற இயற்கை நார்களுடனே நைலன் ரேயன் என்ற செயற்கை நார்களுடனே 60-70 சதவிதம் சேர்த்து நூலாகத்திரித்து உடுக்கும் கலையாக மாற்றி விடுகிறார்கள் "இப் புதிய துணி கம்பளிபோல் உள்ளது. ஆனால் அது சற்று வெது வெதுப்பாகவும், மென்மையாகவும் இலேசாகவும் இருக்கிறது" என்கிறார், W. A. கிப்பன்ஸ் என்னும் ஆராய்ச்சியாளர். ஒருஆடவரின் மேற்சட்டையையும் காற்சட்டையையும் செய்ய முப்பத்தெட்டுக் கோழிக்குஞ்சுகளின் இறகு போதுமாம்

ஒரு பெண்ணின் உடையைச் செய்ய முப்பது கோழிக்குஞ்சுகளின் இறகு வேண்டுமாம். அமெரிக்க ஐக்கியமாகாணத்தில் ஆண்டுதோறும் ஐயிரு கோடி இராத்தல் கோழிக்குஞ்சுகளின் இறகுகளும் முக்கோடி இராத்தல் வான்கோழி இறகுகளும் மக்கட்குளுக்குப் பயன்படவே இவ்வாராய்ச்சி தொடங்கப்பட்டது. இனி, கருவாய்க்கொக்கின் (Little Egret) இறகைப்பற்றிப் பார்ப்போம். அவற்றின் ஆணும் பெண்ணும் கூடும் காலத்தில் மார்பில் உள்ள இறகுகள் நீண்டு, ஈட்டிவடிவம் பெறுகின்றன. முதுகில உள்ள இறகுகளும் நீண்டு, நுனியில்வளைந்து அழகாகத் தோன்றுகின்றன. இவ்விறகுகளை முன்னாளில் எகிப்தியர் தங்கள் தலைப்பாகைகளில், செம்பிரத் தோற்றத்திற்காகத் தரித்துக் கொண்டனர். ஒரு பறவையினின்று கிடைக்கும் இறகு சுமார் பத்து அல்லது பதினைந்து ரூபாய் மதிப்புப் பெற்றதாகையால் எகிப்திலிருந்து இப்பறவைகள் அறவே ஒழிந்தன. ஆனால் இந்தியாவில் சிந்துநாட்டில் கொக்குப் பண்ணைகள் (Egret Farm) வைத்துப் பறவைகளைக் கொல்லாது இறகுகளை மாத்திரம் பறித்துக்கொண்டனர். நைல்நதி யுத்தத்தில் நெப்போலியனைவென்று வாகைசூடிய நெல்சனுக்கு எகிப்திய சுல்தான் இவ்விறகுள்ள பதக்கம் ஒன்றைப் பரிசளித்தானும். அதிகம்என் அறையவேண்டும்? ஈசனே கொக்கிறகை வேணியிலணிந்தான் என்றால் அவனுடைய அடியார்கள் அவனது அடிச்சுவட்டைப் பின்பற்றினாலென்ன குறை?

ஒரு விதத் தயிலான் (Collocalia fuciphaga) தன் உமிழ் நீரினால் கூடமைக்கின்றது. இக் கூடுகளிலிருந்து சைனு தேசத்தவர்கள் "பறவைக் கூட்டுச் சாரம்" எடுக்கின்றனர். கூட்டையும் உண்ணுகின்றனர். இக் கூடுகளைச் சேர்ப்பதைச் சீனக்காரர்கள் ஒரு முக்கிய கைத்தொழிலாகக் கொண்டுள்ளார்கள். இவை பர்மா பக்கத்திலுள்ள தீவுகளிலும் நம் நாட்டுக் கொங்கணக்கரையிலும் உள்ள குகைகளிலும் பெரிய குடியேற்றங்களாகக் (colonies) கூடுகட்டி வாழ்கின்றன. போர்னியோத் தீவிலிருந்து மாத்திரம் சுமார் ஐந்து லட்சம் கூடுகள் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஒரு இராத்தல் நிறையுள்ள கூடு ஏழு ரூபாய் முதல் பதினான்கு ரூபாய் வரை விலையாகுமாம். அநேக லட்ச ரூபாய் மதிப்புள்ள கூடுகள் நம் நாட்டி

லிருந்து சீனுவுக்குச் செல்லுகின்றன. இதனுல் இந்திய அரசாங்கத்திற்குச் சிறிதளவு வரியும் கிடைக்கின்றது.

பறவைகளின் எச்சம் மிகச் சிறந்த உரமாகும். ஏனெனில் அவ்வெச்சத்தில் எரியக்காடி (phosphoric acid) யும் காலகமும் (nitrogen) உண்டு. இது தென்னமெரிக்காவில் 'பெரு' நாட்டின் பக்கத்திலுள்ள தீவுகளில் பெருத்தளவில் அடுக்கடுக்காய்ப் படிந்து அந்நாட்டிற்கே பெரும்பேருக அமைந்துள்ளது. பசிபிக் மாபெருங்கடலில் நாரு (nauru) என்ற தீவும் இத்துறையில் சிறந்து விளங்குகின்றது. செங்கற்பட்டு ஜில்லாவிலே வேடந்தாங்கல் என்ஞேர் இடத்தில் பெரிய ஏரியொன் றுளது. அவ்வேரியில் கருவேல் போன்ற மரங்கள் உண்டு. அவற்றில் ஆயிரக் கணக்கான குடிபெயரும் பறவைகள் (Migrants) வந்து கூடமைக்கின்றன. அப்பறவைகளின் எச்சத்தால் அவ்வேரியின் நீரே நிறம் மாறிக் கலங்கியிருக்குமாம். அந் நீர் பாயக்கூடிய வயல்களுக்கெல்லாம் முன்னுளில் அதிகத் தீர்வை விதிக்கப்பட்டதாம்.

பறவைகள் செய்திகளெடுத்துச் செல்வதைப்பற்றி மாத்திரம் நாம் நீண்ட கட்டுரை வரையலாம். பாரசிகமுதல் தென்னிந்தியா வரையில் பரவியிருந்த சந்திரகுப்த சாம்ராச்சியத்திலே புருக்கள் அஞ்சல் வேலையில் ஈடுபட்டன. அசோகராலும் அவை அச் சேவையில் அமர்த்தப்பட்டன. பன்னிரண்டாம் நூற்றுண்டில் நூறுதீன் என்ற காலிபு (Caliph) கெய்ரோவிலிருந்து யூபரட்டிஸ் (ஐபுராத்து) நதிவரை ஒரு புரு அஞ்சல் திட்டம் நிறுவினுர். பிரான்சுக்கும் பிரஷியாவுக்கும் யுத்தம் நடந்தபோது பாரிசு நகரம் முற்றுகை இடப்பட்டது. அப்போது முற்றுகையிடப்பட்டோர் புருக்கள் மூலம் செய்தியனுப்ப முயன்றனர். ஜெர்மானியர்கள் வல்லூறுகளைப் பழக்கி அப் புருக்களைக் கொல்ல முற்பட்டனர். முதல் உலக யுத்தத்தில் வெருடன் நகரம் ஜெர்மானியரால் முற்றுகை யிடப்பட்டபோது அங்கிருந்த மேஜர்

செயினல் என்பவர் தனது அணியின் அவலநிலையை 183/14 A· F. என்ற புருவின் மூலம் வேறிடத்திலிருந்த தனது சேனதிபதிக்குத் தெரிவிக்கவே உடனே முற்றுகையிடப்பட்ட நகருக்கு உதவி பனுப் பப்பட்டது; நகர் காக்கப்பட்டது. இரண்டாவது உலகயுத்தத்தில் பிரிட்டிஷார் தங்கள் விமானப் படையில் புருக்களையும் செய்திக ளெடுத்துச் செல்லும் சேவையில் ஈடுபடுத்தினர்.

சில நீர்ப்புட்கள் செம்படவர்களுக்கு மீன் பிடித்துக் கொடுப்ப தற்கு உதவுகின்றன. மணிப்பூரில் மீன்பிடிப்போர் பழகிய வழுவாங்கி யின் (Darter or Snake bird) கழுத்தில் ஒரு வளையத்தை மாட்டி (பிடிக்கப்பட்ட மீன் விழுங்கப்படாதிருக்க) அப்பட்சியை நீருக்குள் விடுக்கின்றனர். வழுவாங்கி நீரில்மூழ்கிப் பெரிய மீனைக் கொத்திக் கொண்டுவரும். மீன்பிடிப்போன் பெரியமீனைக் கைக்கொண்டு, அம்மீனில் சிறிய ஒருதுண்டை அதற்குப் பரிசளிக்கிறான். சைனா விலும் அஸ்ஸாமிலும் நீர்க்காகங்கள் (Cormorants) இப்பணிசெய் கின்றன.

பறவைகள் அடிப்படை ஆராய்ச்சி (Pure Research) யிலுமன் றிப் பயன்ஆராய்ச்சி (Applied Research) யிலும் பயன்படுகின்றன. ஆபிரிக்காவில் உள்ள தேன்காட்டிகள் (Honey guides) தேன்கூடுக ளில் உள்ள அடைகளைத் தின்று வாழ்கின்றன. தேனடைகள் மெழு கிலானவை. இப் பறவைகள், பிறபொருள்மாற்றி (Enzyme), யாலா, பேதக னுதவியாலா அல்லது வேறுவழியிலா இம் மெழுகைச் சீரணிக்கின்றனவென்று கண்டுபிடிக்க ஆராய்ச்சியாளர்கள் முயன்று கொண்டுள்ளனர். இம்முயற்சியில் அவர்கள் வெற்றி காண்பாரேல், க்ஷயவியாதியையும் குட்டரோகத்தையும் உண்டாக்கும் கிருமிகளைக் கொல்லும் மருந்தைக் கண்டுபிடிக்கச் சாத்தியப்படும்; ஏனெனில் மேற்சொன்ன கிருமிகளையும் மெழுகு உறையொன்று மூடியுள்ளது.

பறவைகள் கண்ணுக் கழகாயுள்ளன; கர்ணாமிர்தமான கானத்தால் நமக்கின்பம் பயக்கின்றன. ஏன்? அவை சிலருக்கு வயிற்றுப் பிழைப்புக்கருவியாகவும் உள்ளனவே. மைனு, இராட்டினக்குருவி, கிளி முதலியவற்றைப் பழக்கி அவைகளைக் குறிசொல்லும் தொழிலில் ஈடுபடுத்தியும் பல வித்தைகள் கற்பித்தும் சிலர் சிறிதளவு வருவாய் அடைகின்றனர். அண்மையில் ஒரு கூட்டத்தார் கிளிகளைக் கணக்குப் போடவும் எழுத்துக்கள் எழுதவும் கற்பித்து, அவற்றின் வாயிலாகச் சிறிது வருமானம் பெற்று வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்பதைச் சிலர் நாளிதழ்களில் வாசித்திருக்கலாம்.

புட்கள் சாதாரண உலக மக்களுக்குத்தான் தொண்டாற்றுகின்றனவா? இல்லை. அவை உம்பருக்கும் ஊழியம் உளுற்றுகின்றன; புலவருக்கும் புரவலருக்கும் புனித சேவை செய்கின்றன. சத்திமுற்றப்புலவர் தன்மாண்புற்ற மனைவிக்குச் செங்கால் நாரையைத் தூதாக அனுப்பினார். பிசிராந்தையார் அன்னச் சேவலைக் கோப்பெருஞ் சோழனிடம் அனுப்பினர்; கலைக்கூத்துக் கலையையும் கவிபாடும் புலமையுமுடைய விச்சுளிபாயும் மாதுபையைப் பறந்துசென்ற புட் கூட்டங்களை புழற்கோட்டத்திலுள்ள தன்னை ஆதரித்த அயனைச் சடையனிடம் தூதாக அனுப்பினரல்லவா? பாரியினது பாம்பை மற்ற குறுநில மன்னர் முற்றுகையிட்டபோது கிளிகள் தினைக் கதிரைக்கொய்துகொண்டுவந்து கோட்டையிலுள்ளிருந்த மக்களுக்கு உதவவில்லையா? மாணிக்கவாசகர் குயிலை அழைத்து ஆண்டவன் திருப்பெயரைச் சொல்லிக் கூவாயோ என்று ஏங்கி நிற்கவில்லையா? அவை, தேவர்களுக்கு வாகனமாகவும் அமைந்துள்ளன. அன்னத்தின்மீது அமர்ந்தான் அயன்; மன்மதவேள் கிளியின் மீது ஊர்ந்தான். முருகவேள் மயிலைப் பொறியாகவும், சேவலைப் பதாகையாகவும் கொண்டுள்ளான். ஏசுபெருமான் உலகத்தில் வாழும்போது ஒருசமயம் புண்ணிய நதியாகிய யோர்தானில் புனித

நீராடி வெளியேறிய காலை இறைவனும் அவர்மீது புறவு வடிவத்தில் வந்து அருள்புரிந்தாரல்லவா?

இவ்வாறு பலவழிகளிலும் பயன்படும்பறவைகளுக்கு நாம்என்ன பாதுகாப்பளிக்கிறோம்? மேலைநாடுகளில் இன்னின்ன பறவைகள் கொல்லப்படலாகாது என்று அரசாங்கத்தார் சட்டமியற்றி, அச் சட்டத்தை மீறியவர்களுக்குத் தக்கதண்டனையும் தருகின்றனர். நம் நாட்டில் அவ்விதச் சட்டமிருப்பதாகத் தெரியவில்லை. மிகவும் உப யோகமான மைனாவையும் பூச்சியுண்ணும் புட்களையும் உண்ணிக் கொக்குகளையும் அரசியலார் சட்டத்தின்மூலம் பாதுகாக்கவேண்டும்.

பின்னும் பறவைகளுக்குப் பாதுகாப்பிடம் (Sanctuaries) ஒதுக்கப்படல் மிக்க அவசியம். மற்றநாடுகளில் பாதுகாப்பிடங்கள் பலஉண்டு. நம் நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்திலே வேடர் தாங்கல் ஒன்றுதான் பறவைகளுக்குப் பாலைவனச் சோலை போல் உள் ளது. சிலகிராமங்களின் மத்தியிலுள்ள பெரியமரங்களில் பறவை கள் ஏராளமாக வந்து தங்குகின்றன. அம்மரங்களும் அம் மாவாசி களான பறவைகளும் சட்டப்படி பாதுகாக்கப்படல் அவசியம்.

நமது வீடுகளிலும் நந்தவனங்களிலும் பறவைகள் வந்து தங்க வும், நீர் குடிக்கவும், வசதிகள் அளித்து நாம் அவற்றைப் புறந் தருதல் வேண்டும்.

மோரியர் படையெடுப்பு

:(-:0:-):

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தமிழ்ப்பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

மோரியர் படையெடுப்பைப் பற்றிய செய்யுளடிகளை நன்கு ஆராயின், மோரியர்க்கு உதவியாக 'வடுகர்' என்பவரும் 'கோசர் என்பவரும் ஆக இருவகைப்படைவீரர் இருந்தனர்என்பது பெறப்படுகிறது. இவ்விருவர் கொண்ட இருவேறு படைகளை மோரியர் முன் அனுப்பித் தாம் பிற்சென்றதாக மேற்கூறிய பாடலடிகள் பறைபறைகின்றன. அடிமைப்பட்ட நாட்டு வீரரை, அவரை ஆட்கொண்ட பிற நாட்டார் தாம்படையெடுக்கும் முன்னர்ப் புகவிடுதல் இன்றையவழக்கமாகவும் இருந்துவருதல் கண்கூடு. மகதராச்சியத்துக்கு மோரியர் தாம் வென்றடக்கிய வடுகவீரரையும் கோசரையும் இம்முறையில் தம் தமிழகப்படை யெடுப்புக்குப் பயன்படுத்தினர்.

வடுகர்

வடுகர் என்போர் தமிழகத்துக்கு வடக்கே இருந்தவர்:

"பனிபடு சோலை வேங்கடத் தும்பர்
மொழி பெயர் தேத்தர்" 1

"கல்லா நீண்மொழிக் கதநாய் வடுகர்" 2

"கடுங்குரற் பம்பைக் கதநாய் வடுகர்" 3

இன்னணம் பலவாறு வடுகர் இயல்புகள் தமிழ்நூல்களில் நன்கு குறிப்பிடப்பட்டுள்ளமையால், தமிழர் வடுகரோடும் பழக்கமுடையார் என்பதும், தமிழர் வடுகதேயம் கடந்து பொருள்வயிற் பிரிதல் மரபென்பதும் பிறவும் நன்குணரலாம். இவ்வடுகர், வேங்கடத்துக்கு அப்பாற்பட்ட கன்னடரும் தெலுங்கருமே ஆவர்.

---

1 அகநானூறு, 211. 2 அகநானூறு, 107. 3 நற்றிணை, 212.

கோசர்

கோசர் இன்ன நாட்டவர் எனத் தெளிவாகத் தமிழ் நூல்களில் கூறப்பட்டிலர். ஆயினும் சொற்படி நடப்பவர்[4]; அவர் நாடு 'நெய்தல் சேறு' எனப்படுகிறது[5]. அவ்விடம் தமிழகத்ததாயின் கோசர் மோரிய ரோடு தமிழகம் புகுந்தனர் என வரும் செய்யுளடிகட்கு முரண்பட்ட தாகும்.

எனவே, போரில் அவர்தம் ஆற்றல்கண்ட தமிழ் வேந்தர் அவரைச் சேவகத்திற் பிற்றைநாளில் வைத்துக் கொண்டனர். 'அவர்கள் நெய்தலஞ்சேறு' என்ற இடத்திலிருந்து வந்தனர் என்று ஒருவாறு கொள்ளலாம். கோசர் வடுகரைப்போலவே மோரியர் ஆட்சிக்கு உட்பட்டவராகத் தான் இருந்திருத்தல் வேண்டும். இன்றேல் அவர் மோரியர் படையில் இடம்பெறல் யாங்ஙன மியலும்? பாக்களில் வரும் "வடவடுகர்[6] 'வம்ப வடுகர்'[7] என்னும் தொடர்கள் இக் கோசரையே குறிப்பன என்பது சந்தர்ப்பம் நோக்கி அறிவுடையோர் அறியக் கூடும். இதனால் இவ்வீரர் 'டெக்கான்'பிரதேசத்திற்கும் வடபாற்பட்டவர் எனவும், இவரைத் தமிழர் முன் அறியாதிருந்தனர் எனவும் கூறலாம். இவ்வீரர் கிழக்கு வங்காளத்தைச்சேர்ந்தவரென டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் அபிப்பிராயப்படுதல் முற்றும் பொருத்தமானதேயாகும்.

படையெடுப்பு

வடுகர், கோசர் என்னும் படைவீரர் தவிர, மோரியர் படை ஒன்று தனியே இருந்தது. அப் படையில் தேர்கள் இருந்தன. எனவே, இத் தமிழகப் படை யெடுப்பில் மோரியர் படை, வடுகர் படை, கோசர்படை என மூவகைப் படைகள் இருந்தன.

---

[4] அகம், 196. [5] நற்றிணை, 5, 13. [6] புறநானூறு, 378.
[7] அகநானூறு, 375.

(1) இம் மூவருள் முன்னுறவந்த கோசர் தமிழகத்தின் வட மேற்கெல்லையாக நுழைந்து 'துளு' நாட்டை யடைந்தனர்; அந் நாட்டரசனான நன்னனைக் காட்டிற்கு வெருட்டினர்; அவனது பட்டத்து யானையைக் கொன்றனர்; துளுநாட்டைக் கைப்பற்றினர்[1]; நன்னனது காவல் மிகுந்த 'பாழி' என்னும் இடத்தே வடுகர் தங்கிவிட்டனர்[2].

(2) நன்னனை வென்ற கோசர், சேரர் தானைத்தலைவனும் முதிர மலைத் தலைவனுமான 'பிட்டங் கொற்றனைத்' தாக்கினர்; போர் நடந்தது; முடிபு தெரியவில்லை.

(3) பின்னர் 'வாட்டாறு' என்ற ஊரையும் 'செல்லூ'ரையும் ஆண்ட 'எழினி ஆதன்' என்பானைக் கோசர் தாக்கினர். அவன் செல்லூர்க்குக் கிழக்கே கோசருடன் சண்டையிட்டு, அவரது வேல் மார்பில் தைக்கப்பெற்று மாண்டிருத்தல்வேண்டுமெனத் தெரிகிறது.[5]

(4) கோசர், சோணாடடைந்து அழுந்தூர் வேளான திதியனைத் தாக்கினர்; அதுபோது அவனைச் சேர்ந்த ஒரு வீரனது கண்ணைக் கோசர் அழித்தனர் என்பதை அவ் வீரன் மகளால் உணர்ந்த வேள் சினங்கொண்டு போர்புரிந்து பகைவரைப் புறங்காட்டச் செய்தான்[3].

(5) பின்னர் அக்சோசர் பொதியமலையருகிலிருந்த மோகூரைத் தாக்கினர்; மோகூர் பணிந்திலது; அப்பொழுது 'வடுகர்' படையை முன்விட்டுப் பின் புதிதாக வந்த (வம்ப) பெரிய தோள்களையுடைய

---

1 Vide his beginings of South Indian History p p. 94, 59.

2 குறுந்தொகை, 73.

3 அகநானூறு, 375.

4 புறநானூறு, 169.

5 அகநானூறு, 90, 215.

6 புறநானூறு, 251, 281.

மோரிய வீரர் மோகூரைத் தாக்கினர்; முடிபு தெரிந்திலது[7]. இப் படையெடுப்பில் மோரியர் தம் வரவிற்குத் தடையாயிருந்த மலையைக் குடைந்தோ வெட்டியோ வந்திருத்தல் வேண்டுமெனத் தெரிகிறது.[8]

(6) இங்ஙனம் பொதியம்வரையில்வந்த இவ்வீரர் வடக்குநோக்கிச் செல்லுங்கால், 'இளஞ்சேட் சென்னி' என்ற சோழமன்னன், தென் பாதவரான மோகூர் மன்னர் முதலியவரை வென்ற வடவடுகரை (கோசரை) வென்றான்[1]. மேலும் இவன் 'குறை வினையை முடிப்பதற்காக (அரைகுறையாகப் பகைவரைத் தோற்கடித்து அத்துடன் விடாமல் அவர்களை முற்றிலும் தோற்கடிப்பதற்காகப்) பாழி நகரை அழித்து 'வம்ப வடுகர்' (புதிதாகக் குடிபுக்க வடுகர்) கோசர் தலைகளை அறுத்து அழித்தான்' என் அழகாகவும் தெளிவாகவும் அகநானூற்றுச் செய்யுள் கூறுதல் கவனிக்கத் தக்கது. இவ்வாறு 'பாழி' யை வென்ற காரணம் பற்றி அச்சோழன் 'செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி' எனப்பட்டான்[9].

மோரியர் தோல்விக்குக் காரணம்

இவ்வாறு வலிமைமிக்க சோழமன்னன் போர் தொடுத்து வென்றமையாற்றான், மோரியர் படை நிலைகுலைந்து தனது கருத்து நிறைவேறப்படாமல் தமிழகம் விட்டு மீண்டிருத்தல் வேண்டும். சோழமன்னன் எதிர்த்திராவிடின், தமிழகமும்' மோரியர் ஆட்சிக்குட்பட்டிருக்கும். தமிழகத்தின் படைவலிமையையும் இயற்கையமைப்பையும் பிறவற்றையும் அறியாத வடநாட்டினராதலின், மோரியர் துளுநாட்டை முதலில்வென்று, சேரநாடு சென்ற சோர்தலைவனைத்தாக்கி,

---

[7] அகநானூறு, 196, 262.

[8] புறநானூறு, 69, 251, 283; புறம், 175.

[1] புறநானூறு, 205; புறம், 378.

[9] அகம், 375; புறம், 378.

வாட்டாறுசென்று, பின்னர்ச் சோழனுடைந்ற திதியனிடம் தோல்வி யுற்று, பிறகு தெற்குநோக்கிச்சென்று தாம்பெற்ற தோல்விக்கீடாகத் தென்பரதவரை வென்றிருத்தல் வேண்டும். அவரைவென்ற மகிழ்ச்சி யோடு, தாம்முன்னர் தோற்ற சோழநாட்டுவழியே வருகையில் சோழனுல் முறியடிக்கப்பட்டு, தமக்கு முதல் வெற்றி கிடைத்த துளுநாட்டை நோக்கி ஓடியிருத்தல் வேண்டும். சோழன் அங்கும் அவரைத் துரத்திச் சென்று பாழியை அழித்து வடுகரை வென்றான். சோழனது வெற்றியால், மோரியர், 'தமிழகப் படையெடுப்புப் போதும்' எனச் சலிப்புற்றுப் போயிருக்கலாம்.

இப் படையெடுப்பு மோரியர்க்கு வெற்றியைத் தராமையாலும், தமிழகம் சுயேச்சையாக அசோகன் காலத்தின் விளங்கினமையினுலும் சோழனல் அவர்கள் இறுதியாகத் தோற்கடிக்கப் பெற்றிருத்தல் வேண்டும் என்னும் சரியான முடிபுக்கு வரவேண்டி யிருக்கிறது. பெரு வேந்தனன சோழன் இப்படையெடுப்பை எதிர்த்திராவிடின், தமிழகம் மோரியர் கைப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. இப்படையெடுப்புச் சம்பந்தமாகப் பாண்டியர் சேரர் பெயர்கள் காணப்படவில்லை. இதற்குப் படையெடுத்தவர் தமிழகத்துக்கே புதியவர் ஆதலின், தம் மனம்போனபடி படையொடு சென்று, எதிர்ப்பட்டாரை எதிர்த்து வென்றும் தோற்றும் இறுதியிற் பயனடையாது மீண்டனர் என்னும் சமாதானம் தவிர வேறு யாதுதான் இப்போதுள்ள நிலையில் கூறல் இயலும்?

தமிழரும் நுண்கலைகளும்

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தமிழ்ப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

நுண்கலைகள்:

இசை, நடனம், நாடகம் என்பன நுண்கலைகள் எனப் பெயர் பெறும். இவற்றைப் போற்றி வளர்க்கும் நாடே நாகரிகநாடு என்பது மக்களது நீண்டநாட் கருத்தாக இருந்து வருகின்றது. நுண் உணர்வைத் தட்டிஎழுப்பித் தம் வயப்படுத்தும் கலைகளாதலின், இவை நுண்கலைகள் எனப் பெயர்பெற்றன. நம் தமிழ்மக்கள் இக் கலைகளை எங்ஙனம் போற்றி வளர்த்தனர் என்பதைச் சுருக்கமாக இங்குக் காண்போம்.

இசைக்கலை:

இசை என்னும் சொல் இசைவிப்பது, தன் வயப் படுத்துவது எனப் பொருள்படும். மரம், செடி, கொடி என்னும் ஓரறிவுயிர் முதல் மக்கள் என்னும் ஆறறிவுயிர் ஈறாக உயிர்களனைத்தையும் இசை தன்வயப்படுத்த வல்லது. மகுடி இசையில் மயங்கும் பாம்பும், இசையில் மயக்குண்டு மிக்க சுமையை இழுக்கும் வண்டிமாடும், பாடிக்கொண்டே பாறைக்கல்லை உருட்டுபவரும் மேற்கூறப்பட்ட உண்மைக்குச் சான்றாவார். இத்தகைய சிறப்புடை இசை, மதங்கொண்ட யானையையும், வழிப்பறி செய்யும் கொலைஞரையும் மனமாற்றம் செய்யவல்லது என்பதை அகநானூறு, நற்றிணை, சிந்தாமணி முதலிய நூற்செய்திகளிலிருந்து அறியலாம்.

பண்டைத் தமிழகத்தில் செய்யப்பட்ட நூல்களிற் பெரும்பாலன செய்யுள்வடிவிலேயே அமைந்தவை. பிற்காலத்தில் தோன்றிய கல்வெட்டுக்களிற் பலவும் அங்ஙனமே. அவற்றுக்கும் பிற்படத்

தோன்றிய கடிதவடிவில் அமைந்துள்ள சீட்டுக்கவிகளும் மிக்கிருத்தலைக் காண, ஏறத்தாழப் பதினெட்டாம் நூற்றாண்டு வரையில் தமிழகத்தில் இசைத்தமிழ் நூல்களே மிக்கிருந்தன என்று கூறுதல் பொருந்தும். தமிழ்ப்பிள்ளைகள் தம் குழந்தைப் பருவத்தில் தாலாட்டுப் பாக்களையும் ஊசற்பாக்களையும் கேட்டனர்; விளையாடும் பருவத்தில் பந்துவிளையாட்டுப் பாடல் (கந்துக வரி) அம்மானை, பொற் சுண்ணம், சாழல், தெள்ளேணம், உந்திபறத்தில், தோள் நோக்கம் முதலிய ஆடல்களுக்குரிய பாடல்களைப் பாடி மகிழ்ந்தனர்; மணத்தில் மங்கலவாழ்த்துப்பாடலைக் கேட்டனர்; உலக்கை கொண்டு குத்தும் தொழிலுக் குரிய பாட்டு 'வள்ளைப்பாட்டு' எனப் பெயர் பெற்றது. ஏற்றங்கொண்டு நீர் இறைப்பவர் பாடிய 'ஏற்றப் பாட்டு' முதல் உழைப்புத் தொழில்கள் அனைத்திற்கும் பாடல்களிருந்தன என்பது தெரிகின்றது. தமிழன் இறந்த பின்னரும் பாட்டு அவனை விடவில்லை. பலவகைச் சந்தங்களில் 'ஒப்பாரிப் பாக்கள்' இன்றும் இருத்தலைக் காணலாம். இங்ஙனம் பழந்தமிழர் தம் பிறப்பு முதல் இறப்பு வரை இசையிலேயே வாழ்ந்து வந்தனர் எனக் கூறுதல் முற்றிலும் பொருந்தும்.

இசைக்குரிய நூல்கள் பலவற்றுள் சிலப்பதிகாரம் தலைசிறந்தது. அதன் உரையைக் கொண்டு முன்னிருந்த இசைத் தமிழ் நூல்கள், இசைக் கருவிகள், இசை வாணர்கள் பற்றிய பல விவரங்களை நன்கு அறியலாம். கி. பி. 7, 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய தேவாரத் திருப்பதிகங்களும்: ஆழ்வார் அருட்பாடல்களும் அக்கால வழக்கிலிருந்த பலவகைப் பண்களையும் (இராகங்களையும்) தெரிவிப்பனவாகும். குறவஞ்சி, பள்ளு, சிந்து முதலியன இசைத்தமிழ் நூல்கள்.

தமிழ்ப் 'பண்கள்' ஏழு; அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பெயர் பெற்றன. இவற்றி

லிருந்து பிறப்பவை 'திறங்கள்' எனப்பட்டன. இவ்வாறு பிறக்கும் பண்களும் திறங்களும் பலகிளைகளாக இயங்கும் வகைகளில் எண்ணிறந்த இசைவகைகள் கண்டறியப்பட்டிருந்தன. பண்கள் பலவகைப்படும். அவற்றுள் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் எனப் பண்கள் ஐந்து. இவற்றின் வகைப்பட்ட பண்கள் பல. அவற்றுள் பகற்பண்கள், இராப்பண்கள், காலை, மாலைப் பண்கள் என அவ்வப்பொழுதிற் கமைந்த பண்களும் வழக்கில் இருந்தன.

இசைக்கருவிகள்:

தண்ணுமை, தடாரி, குடமுழா முதலிய பலவகைத் தோற்கருவிகளும், புல்லாங்குழல், நாகசுரம் முதலிய துளைக்கருவிகளும் அக்காலவழக்கில் இருந்தன. நரம்புக்கருவிகள் பலவகைப்பட்டன. அவற்றுள் ஏழுநரம்புகளுடைய செங்கோட்டு யாழ், பதினான்கு நரம்புகளையுடைய சகோட யாழ், பத்தொன்பது நரம்புகளையுடைய மகரயாழ், இருபத்தொரு நரம்புகளையுடைய பேரியாழ் என்பன வழக்கில் இருந்தன. கி. பி. 300-க்குப் பிறகே வீணை என்னும் புதிய கருவி வழக்கிற்கு வந்தது. வெண்கலத்தாற் செய்யப்பட்ட தாளவகைகள் கஞ்சக்கருவிகள் எனப்பட்டன.

இசை வாணர்

பாடுவோர் இன்ன இன்ன இலக்கணங்களுடன் பாடவேண்டும் என்பது சிந்தாமணியிலும் திருவிளையாடற்புராணத்திலும் குறிக்கப்பட்டுள்ளது.

"கருங்கொடிப் புருவம் ஏறா கயல்நெடுங் கண்ணும் ஆடா
அருங்கடி மிடறும் விம்மா அணிமணி எயிறும் தோன்றா
இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடி னாளோ
நரம்பொடு வீணை நாவின் நவின்றதோ என்று நைந்தார்"

சீவகசிந்தாமணி.

"வயிறது குழிய வாங்கல் அழுமுகங் காட்டல் ஆங்குஞ்
செயிரறு புருவ மேறல் சிரநகைக் குறல்கண் ணூடல்
பயிறரு மிடறு வீங்கல் பையென வாய்அங் காத்தல்
எயிறது காட்டல் இன்ன உடற்றொழில் குற்றம் என்ப."

திருவிளையாடற் புராணம்.

இசையாசிரியர் தகுதிகள் சிலப்பதிகார உரையிலும் விளக்கப்பட்டு உள்ளன. இசைவாணர்கள் பாணர், பாடினியர் எனப் பெயர் பெற்றனர். இவர்கள் அரசர்களாலும் வள்ளல்களாலும் பாதுகாக்கப் பட்டனர்.

நடனக்கலை:

இசைக்கலையைப் போலவே நடனக்கலையும் தமிழகத்தில் நன்கு வளர்ச்சிபெற்று வந்தது என்பதனைத் தொல்காப்பியம், சிலப்பதிகாரம் முதலிய பழந்தமிழ் நூல்களால் நன்கு அறியலாம். வேட்டுவப் பெண்கள் முதல் எல்லாநிலத்து மக்களும் தத்தம் நிலத்துக்குரிய நடனவகையில் சிறப்புற்றிருந்தனர். இதனை வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை முதலிய பெயர்களைக் கொண்டு நன்கு அறியலாம். நடனக்கலையில் தேர்ச்சிபெற்ற பெண்கள் விறலியர் எனப் பட்டனர். நடனத்திற் பயிற்சிபெறும் பெண் ஏழுவயது முதல் பன்னிரண்டு வயதுவரை அக்கலையிற் பயிற்சி பெறுதல் வேண்டும். பயிற்றுவிக்கும் ஆடலாசிரியனது இலக்கணம் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. வசைக்கூத்து, புகழ்க்கூத்து, சாந்திக்கூத்து விநோதக் கூத்து, வேத்தியல், பொதுவியல் என நடனம் பலவகைப்பட்டது. கூத்து என்னும் பழந்தமிழ்ப் பெயரே நாளடைவில் நடனம் என வழக்குப் பெறுவதாயிற்று. கூத்திற்குரிய பலவகை நூல்களும் அக்காலத்து வழக்கில் இருந்தன. பாடல்பெற்ற பலகோவில்களில் நடனமாதர் இருந்து சமயத்தொடர்பாக நடனக்கலையை நன்கு வளர்த்து வந்தனர் என்பது எண்ணிறந்த கல்வெட்டுக்களால் அறியப் படுகின்றது. அவர்தம் கலைச்சிறப்பைப் பின்வரும் பெரிய புராணப் பாடலைக்கொண்டு நன்கு அறியலாம்.

"கற்பகப்பூந் தளிரடிபோய்க் காமருசா ரிகைசெய்ய
உற்பலமென் முகிழ்விரல்வட் டணையோடும் கைபெயரப்
பொற்புறுமக் கையின்வழிப் பொருகயற்கண் புடைபெயர
அற்புதப்பொற் கொடிநுடங்கி ஆடுவபோல் ஆடினர்."

பெரியபுராணம்.

நாடகக்கலை:

இது கற்றவர் கல்லாதவர் என்னும் இருதிறத்தாரையும் தன் வசப்படுத்த வல்லது; மக்களுக்கு நல்லறிவை ஊட்டி ஒழுக்கத்தை வளர்க்க வல்லது. இக்கலை முதலில் சமயத் தொடர்பாகவே ஏற்பட்டது என்பது அறிஞர் கருத்து. நாடகத்திற்றான் பாட்டு, வசனம், நடனம் என்பன கலந்து வருகின்றன. ஆதலின் இக்கலை தமிழகத்தில் மிகுதியாக வழங்கப்பட்டது. இராசராசேசுவர நாடகம், பூம்புலியூர் நாடகம், சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் என்பன பிற்காலத்தில் நடிக்கப்பெற்ற நாடகங்களிற் சிறந்தனவாகும். நாடக ஆசிரியர்கள் பிற்காலச் சோழர் முதலிய தமிழரசரால் நன்கு போற்றப் பட்டனர் என்பதைக் கல்வெட்டுக்களால் அறியலாம். சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகரால் செய்யப்பட்டது. அந்நாடகம் இன்னும் ஆண்டுதோறும் தஞ்சைப் பெரியகோயிலில் நடிக்கப்பட்டு வருகிறது.

முடிவுரை:

நாகரிக உணர்ச்சி தோன்றிய நாள்தொட்டுத் தமிழகத்தில் இம்மூன்று கலைகளும் வளர்பிறைபோல் வளர்ந்துவந்தன என்பதை இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் இனிது உணர்த்துகின்றன.

பொச்சாவாக் கருவி

வித்துவான், ஆ. சிவலிங்கனார் அவர்கள், விரிவுரையாளர்,
தமிழ்க் கல்லூரி, மயிலம்.

அரியவென் றாகாத இல்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

இக்குறளுக்குப் பரிமேலழகர், "இவை செய்தற்கரியன வென்று சொல்லப்பட்டு ஒருவர்க்கு முடியாத காரியங்களில்லை; மறவாத மனத்தானே எண்ணிச் செய்யப்பெறின்" என்று உரை கூறினார்; பொச்சாவாக் கருவி என்பதற்கு மறவாதமனம்' எனப்பொருள்கொண்டு, 'பொச்சாவாத என்பதன் இறுதிநிலை விகாரத்தால் தொக்கது; அந்தக்கரணமாதலின் கருவி யென்றார்.' என விளக்கமும் கூறினர். அவர் மணக்குடவர் பொச்சாவாமையாகிய கருவியென்று பொருள் கொண்டார். மணக்குடவர் கொண்ட பொருளே சிறந்தது என்பர் சிலர். அதற்கு அவர் சேனாவரையர் கூற்றினைச் சான்று காட்டுவர். அது வருமாறு:—

'நிலனும் பொருளும்' (தொல். சொல். 234) எனத் தொடங்கும் பெயரெச்ச வாய்பாடுகளும், கொண்டு முடியும் பொருள்களும் பற்றிய நூற்பாவின் உரைக்கீழ், "நின்முகம் காணு மருந்தினேன் என்னுமால் (குறிஞ்சிக்கலி 24. என்புழிக் காட்சியை மருந்து என்றாதலின் காணும மருந்து என்பது வினைப்பெயர் கொண்டதாம்; பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின் என்புழிப் பொச்சாவாக் கருவி என்பதுமது" என்றுகூறினர் சேனாவரையர். இவர் கூற்றே அவர்க்குச் சான்றாம். இதுபற்றிச் சிறிது காண்போம்.

'காணு மருந்து' என்பது காணும் காட்சியாகிய மருந்து என விரிக்கப்படின் காணும் என்ற பெயரெச்சம் காட்சி என்ற தொழிற்பெயரைக் கொண்டதாம் என்க. எனவே காட்சியே மருந்து என்றான் என்பதில் ஐயமில்லை. 'பொச்சவாக் கருவி' என்பது பொச்சாவாமையே கருவி எனக் கூறப்பட்டதாகக் கொள்ளவேண்டுமாயின், பொச்சாவாத பொச்சாவாமையாகிய கருவி என விரிக்கப்படவேண்டும். பொச்சாவாத என்பது பொச்சாவாமை என்பதைக்கொண்டு முடிந்ததாகக் கொள்ளவேண்டும். சேனாவரையர் கூற்றுக்கு இது விளக்கமாகும். காட்சியாகிய மருந்து என்றாலும் பொச்சாவாமையாகிய கருவி யென்றாலும் விளக்கம் குன்றக் கூறலாகி முடியும். அன்றியும் காணும் என்பதற்குக் காட்சி யென்ற பொருளும் பொச்சாவா என்பதற்குப் பொச்சாவாமை என்ற பொருளும் இன்மையறிக.

இனிச் சேனாவரையர் கூற்று எவ்வளவிற் பொருந்தும்என்பதைக் காண்போம். காணும் காட்சியாகிய மருந்து என்பது பொருந்தும், பொச்சாவாத

பொச்சாவாமை என்பது பொருந்துமா என்பது ஐயத்திற்கிடமாக இருக்கி றது. நடக்கும் நடப்பு, செல்லும் செலவு எனவும்; நடந்த நடப்பு, சென் செலவு, நடக்கின்ற நடப்பு செல்கின்ற செலவு எனவும் உடன்பாட்டிலும் நடவாத நடப்பு, செல்லாத செலவு என எதிர்மறையிலும் ஆகஇருவகை வழ கிலும் காணலாம். ஆனால் நடவாத நடவாமை செல்லாத செல்லாமை எ யாண்டும் கண்டிலேம். ஆதலின் பொச்சாவாத பொச்சாவாமை எனக் கூட் வது பொருந்துமா என்பது ஐயமாகவே இருக்கிறது.

இனி நச்சினார்க்கினியர் கூறியதைக் காண்போம். அவர், "நின்முக காணும் மருந்தினேன் என்னுமால் என்புழி, நின்முகத்தைக் காண்ட காரணமாக அதன் காரியமாகப் பிறந்த அருளே மருந்தாதல் தன்மையா உடையன் எனவரும் காரியத்தை ஒன்றென முடித்தற்கண் அமைத்து கொள்க" எனக் கூறிக் காணும் மருந்து என்பது கருவிப்பொருளது என் கருவிக்கண் அடக்கினர். பொச்சாவாக் கருவி என்பதையும் கருவிக்கல என்பதையும் கருவிக்கண்ணேயே யடக்கினர். சேனாவரையர் கொண்டது போலின்றி (தொழிற் பயர் கொண்டது என்னுமல்) பொச்சாவாத கருவ என்றே கொண்டனர். பெயரெச்சம் கருவிப் பொருட்கண் வந்ததற் வென்றவேல் என்று உதாரணம் காட்டிய நச்சினார்க்கினியர் மீண்டும் ஒ உதாரணம் காட்டவேண்டுவதில்லையேனின், சேனாவரையர் பொச்சாவா கருவி என்பது வினைபெயர் (தொழிற்பெயர்) கொண்டது என்றாராதலின் இவர், அது கருவிகொண்டதெனக் காட்டவேண்டுவது இன்றியமையா தாயிற்று. வென்றவேல் என்புழி வெல்லுதல் என்ற வினைக்கு வேல் கருவ யாக இருத்தல் போலப் பொச்சாவாக் கருவி என்புழி பொச்சாவாமையாகி வினைக்குக் கருவி மனம் ஆதலின், கருவிக்கண் அடங்கும் என எடுத்து காட்ட வேண்டுவதாயிற்று. ஒருவனுக்கு அவனின் வேறாகாத உறுப்புக்க யாவும் கருவிகளாகவே கூறப்படும். கண்ணுக்குப் புலப்படாத உள்ளுறுப்பு களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரங்களை அந்தக்கரணம் என்று கூ யிருத்தலையும் காண்க. அதனால்தான் பரிமேலழகர் 'அந்தக் கரணமாதலி மனம் என்னும் கருவி என்றே கூறினர் வள்ளுவர்' என்றார். எனவே பொ சாப்பு ஒருவன் செயலாக மனம் அவற்குக் கருவியாகக் கூறப்படும்; நடத்த ஒருவன் செயலாகக் கால் அவற்குக் கருவியாகக் கூறப்படுதல்போல. இ வாறே எதிர்மறையிலும் கொள்க. கொள்ளவே பொச்சாவாக்கருவி என் தற்குப் பொச்சாவாத மனம் என்றே பொருள்படுவதை யறியலாம். எனவே நச்சினார்க்கினியரும் பரிமேலழகரும் ஒத்தகருத்தினரே என்னலாம். எனவே 'பொச்சாவாமையாகிய கருவி' என்பதினும் 'பொச்சவாத கருவி' என்பதே சிறக்கும் என்னலாம்.